தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 25, பிரமோதூத—திருவள்ளுவர் ஆண்டு 2021.

1990, மே 8, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில், 9.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை."

உண்பவர்களுக்குத் தக்க உணவுப் பொருட்களை விளைவித்துத் தருவதோடு, பருகுவதற்குத் தானே ஒரு உணவாக இருப்பதும், மழையாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 2659 மற்றும் 5814 பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.

திருவாரூர் அரசினர் கல்லூரிக்குக் கட்டிடம் கட்டுதல்

*4283 திரு. மா. மணிமாறன் :
மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், திருவாரூர் அரசினர் கல்லூரிக்கு மான்யக்குழு நிதியுதவியுடன் ரூ. 5.6 லட்சம் மதிப்பீட்டில் கட்டிடம் கட்ட பொதுப்பணித்துறை, மதிப்பீடு தயாரித்து வழங்குவதில் தாமதம் ஏற்படுவதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சை மாவட்டம், திருவாரூர் அரசினர் கல்லூரிக்கு மான்யக்குழு நிதியுதவியுடன் ரூ. 5.6 இலட்சம் மதிப்பீட்டில் கட்டிடம் கட்ட பொதுப் பணித் துறையால் மதிப்பீடு தயாரிப்பதற்குச் சில அலுவலக நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியிருந்ததால் இடையில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

[1990 மே 8

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியளித்துப் பல ஆண்டுகள் ஆகியும், பொதுப் பணித் துறையினால் மதிப்பீடு செய்வதில்தான் தேக்கம் ஏற்படுகிறது. எனவே, இதுபோல நிதி பெற்றதற்குப் பின்னால், மதிப்பீடு தயார் செய்வதில், பொதுப்பணித் துறையினால் ஏற்படுகிற இந்த மந்தனத்தைப் போக்கு வதற்கு ஏதேனும் அதிகபட்சமான தொகை வருகிற நேரத்தில், பொதுப் பணித்துறையிலிருந்து 'டெப்புடேஷன்' ஆகப் பெற்று, மதிப்பீடு மட்டுமாவது தயார் செய்வதற்கு தனித் துறையை, இந்தக் கல்வித் துறை ஏற்படுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியைப் பொறுத்தவரையில் திட்ட மதிப்பீடு தயாரித்து வழங்கு வதற்கான கோரிக்கை 27–1–1989 அன்று செயற் பொறியாளர் அவர்களால் பெறப்பட்டது என்பதிலேதான் தொடங்குகிறது. ஆனால், திட்ட மதிப்பீடு வட்டார அலுவலகத்திலிருந்து, துணை வட்டார அலுவலகத்திற்கு குறிப்புரை பெறுவ தற்கு இரு முறை திருப்பியனுப்பப்பட்டது. சில காரணங்களுக்காகத் திருப்பியனுப்பப்பட்டது என்றும், மண் பரிசோதனை மற்றும் முதல்வரின் கையொப்பம் — முதல்வர் என்பது அங்கே கல்லூரி பிரின்சிபால், அவருடைய கையொப்பம் பெறுவதற்குச் சில நாட்கள் ஆனபோதிலும், திருச்சி, செயற் பொறியாளர் 1–6–1989 அன்று திட்ட மதிப்பீட்டினை திருச்சி, கண்காணிப்புப் பொறியாளருக்கு அனுப்பி, அவர் அத் திட்ட மதிப்பீட்டினை தலைமைப் பொறியாளர் அலுவலகத் திற்கு 27–6–1989 அன்று அனுப்பியுள்ளார் என்றும், அதனுடைய தொடர்ச்சியாக 4–7–1989 அன்று, நிர்வாக ஒப்புதலுக்காக அனுப்பியுள்ளது என்றும் விவரங்கள் இருக் கின்றன. இடையிலே ஒவ்வொரு விவரமும் பெறுவதி லேயும், 10 நாட்கள், 20 நாட்கள் என்பதற்குப் பதிலாக, 2 மாதங்கள், 3 மாதங்கள் ஆகின்றன. இது வழக்கமாக நடைபெறுகின்ற ஒரு முறையாகத்தான் இருக்கிறது.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றாண்டு அளவிற்கு அதில் சுணக்கம் ஏற்பட் டிருக்கிறது. அந்த மூன்றாண்டுகளுக்குப் பிறகு, நாங்க ளெல்லாம் அவர்களிடத்திலே அணுகிக் கேட்டதற்குப் பின்னாலேதான், வேலையே நடந்திருக்கிறது. இவ்வளவு பணத்தைப் பெற்றதற்குப் பின்னாலேகூட, பொதுப் பணித் துறையினால் ஏற்பட்டிருக்கிற இந்தச் சுணக்கத்தைப் போக்குவதற்கு வேறு ஏதாவது நடவடிக்கை எடுக்க அரசு ஆராயுமா என அறிய விரும்புகிறேன்.

1990 மே 8]

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓராண்டு காலமாகத்தான் இது தீவிரப்படுத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் அரசினர் கல்லூரிக்குத் தமிழக முதலமைச்சர் கலைஞரின் பெயர் மீண்டும் சூட்டப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களுடைய பெயரை, கலைஞர் பெயருக்குப் பதிலாக சூட்டியிருக்கிற காரணத்தினால், அதையே கலைஞர் வரவேற்றிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பிடும் போது இந்தத் திட்ட மதிப்பீட்டுக்கான தயாரிப்புகள் என்பது, பொதுப் பணித் துறையிலே வழக்கமாக இருக்கக்கூடிய காலங்களை விட, 2, 3 மாதங்கள் அதிகம் ஆகிறது. இதனால் இதுவும் வழக்கமாக இருக்கக்கூடிய ஒன்றுதான் என்று சொன்னார். திட்ட மதிப்பீடு தயாரிப்பதற்குச் சில நாட்களிலே மாற வேண்டிய அந்தத் தபால்கள், 2 மாதம், 3 மாதம் காலதாமதம் ஆகிறது என்றும் குறிப்பிட்டார்கள். அப்படித் தாமதம் ஆவதன் விளைவாக, ஒரு மதிப்பீடு ரூபாய் 5.6 லட்சத்திற்கு ஆரம்பித்து, கடைசியாக திட்ட மதிப்பீடு தயாரிப்பு என வரும்போது, அதன் மதிப்பீட்டுத் தொகை கூடுதலாகி, மறுபடியும் பின்னால் அதற்கு அதிகமான ஒதுக்கீடு கொடுக்க வேண்டிய நிலைமைகள் ஏற்பட்டு, அந்த வேலைகள் நடைபெறுவதே பின்னுக்குப் போய் விடுகின்றன. எனவே, இந்த நீண்ட காலத் தாமதம் என்பது வழக்கமாக இருக்கக் கூடிய இந்த வழக்கத்தை மாற்றி ஒரு புதிய பழக்கத்தைக் கொண்டு வர அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

9–05 மணி

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனை, முயற்சிக்கலாம் என்ற விடையோடு முடியும் என்று நம்புகிறேன்.

திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா காலத்திலிருந்து நம்முடைய முதல்வர் காலம் வரை 150-க்கும் மேற்பட்ட கல்லூரிகள் உருவாக்கப்பட்டன. 10 ஆண்டுகளாக எந்தக் கல்லூரியும்

பழுது பார்க்கப்படவில்லை. மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு அதிக நிதி ஒதுக்கீடு செய்து இருப்பதால், அரியலூர் கலைக் கல்லூரியும் எடுத்துக் கொள்ளப்பட்டு, முன்னுரிமை வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த அடிப்படையில் நிதி ஒதுக்கீடு மிகக் குறைவாகத்தான் இருக்கிறது. இருந்தாலும்கூட, இப்படிப்பட்ட காரியங்களுக்கு ஏதேனும் நிதிக் கடன் பெற முடியுமா என்பது அரசாங்கத்தின் முயற்சியிலே இருக்கிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, திருவாரூர் அரசினர் கலைக் கல்லூரிக்குக் கட்டிடம் கட்டுவதற்காக பொதுப்பணித்துறைக்கு எந்தத் தேதியில் பணம் செலுத்தப்பட்டுள்ளது ? பொதுப்பணித் துறை இவ்வளவு காலத்திற்குள்ளாக அந்தக் கட்டிடம் கட்டி முடிக்க வேண்டும் என்று அரசு ஏதாவது ஆலோசனை வழங்கியுள்ளதா என்பதை நான் தங்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்த வரைபடம், கட்டுவதற்கான செயற்பாட்டில் இடையூறு இல்லாமல் நல்ல முறையில் நிறைவேறும் என்பதற்கான சான்று, இவை எல்லாம் சேர்ந்து அரசிற்குக் கிடைத்து 5–9–1989 அன்று பெறப்பட்டு, அரசாணை, 6–3–1990-இல் இப்பணிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு அரசின் பங்குத் தொகையான 2.8 இலட்சம் அளிப்பதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இது நடைமுறையிலேயே, பல நேரங்களில், சில திட்டங்களை நிறைவேற்றுவதில் அவ்வப்போது ஏற்படுகிற சில கருத்து வேறுபாடு காரணமாக ஏற்படுகிற தாமதத்தினுடைய விளைவாக இருக்க வேண்டும். இருந்தாலும் 6—3—1990-இல் தான் இதற்கான, அரசாங்கத்தினுடைய பங்கு நிதி — யூ.ஜி.சி. யினுடைய நிதியுதவியும் அவர்களுக்குக் கிடைக்கிறது என்பதால் பங்கு நிதி வழங்கப்பட்டு, கட்டுவதற்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

கல்லூரி அமைத்தல்

* 8049 திரு. எம். கே. கரீம் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கூடலூர் தொகுதிக்கு ஒரு கலைக்கல்லூரி அமைக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?